(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 2.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2018 செப்தெம்பர் 04, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2018 ஆகஸ்ட் 24, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2018 செத்தெம்பர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

10/ '18

கௌரவ கனக ஹேரத் ,— தொலைத் தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்மைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தியகிழக்கு மனைச்சேவையை உள்ளிட்ட வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள இலங்கை உழைப்பாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அவர்கள் மாதாந்தம் இலங்கைக்கு அனுப்பிவைக்கின்ற அந்நிய செலாவணியின் அளவு எவ்வளவு ;

(iii) வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடுகின்ற இலங்கையர் பெறுகின்ற சம்பளத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கின்ற பணத்திற்காக அரசாங்கத்தினால் வரி அறவிடப்படுகின்றதா;

(iv) ஆமெனில், மேற்படி மாதாந்த வரிவீதம் எவ்வளவு;

(v) பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது உழைப்பினை செலவிட்டு பெறுகின்ற சம்பளத்திருலிந்து அரசாங்கம் வரிஅறவிடுவது நியாயமானதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

2.

29/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், கங்க இஹல கமநல ஆளுகைப் பிரதேசத்தின், கிரிஉல்ல விஹாரைக்கு உரித்தான ஜம்புகஹமுலதெனிய எனும் வயல் முறையான அனுமதியின்றி நிரப்பப்பட்டு தனியார் வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு போலி ஆவணங்களை தயார் செய்ய அரச நிதி செலவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளருக்கான வீட்டுக்கான பிரவேசப் பாதையாகவே மேற்படி வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி வீதியின் ஆரம்பப் பகுதியும் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) இந்த இடத்தில் நடைபாதையொன்றேனும் இருக்கவில்லை என்பதையும்; பிரதேச சபைக்கு உரித்தானதல்ல என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பொது மக்களின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்ற இவ்வாறான அலுவலர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

57/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 208 ஆம் இலக்க முன்மொழிவின்படி, பாதுகாப்பு முதலீட்டுக் கணக்கு முறை இரத்துச் செய்யப்பட்டதா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

(iii) மேற்படி முன்மொழிவின் மூலம் இலங்கைக்கு வெளியே தமது நிதியை வைத்திருக்கும் இலங்கையர்களுக்கு அந்நிதியை தாய் நாட்டுக்கு எடுத்துவரும் படி செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு இதுவரை கிடைத்துள்ள பிரதிபலிப்புகள் யாவை;

(iv) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் படி, வங்கிக் கணக்கு முறையினூடாக வெளிநாட்டில் வைத்திருக்கும் பணத்தை இந்நாட்டிற்கு அனுப்பும் எந்தவொரு ஆளுக்கும் எதிராக அரசாங்கத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை என திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்கு நிதி அமைச்சர் சட்ட ரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

142/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. எஸ்.சீ.பீ. செனவிரத்ன (பெயர்வழிப் பதிவுக்கோப்பு இலக்கம் 3/2/3/3/1/18/-தொகுதி 11) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவையிலிருந்து நீங்கிய திகதி யாது;

(ii) தொழிலிலிருந்து நீங்கும்போது அவர் வகித்த பதவி யாது;

(iii) திரு. செனவிரத்ன தனது உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட பழிவாங்கல் தொடர்பிலான முறைப்பாடு, மேற்படி முறைப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் வழங்கப்பட்ட கட்டளை ஆகியவற்றை சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) இவருக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் மற்றும் மேற்படி நிவாரணங்கள் கிடைக்கப்பெற்ற திகதி யாது;

(iii) இவருக்கு நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

174/ '18

கௌரவ (டாக்டர்) நளின்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் உள்ள இரும்புகளை விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா;

(ii) ஆமெனின், அத் திகதி யாது;

(iii) கேள்விப் பத்திரங்களுக்காக முன்வந்த கம்பெனிகள் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த விலைகள் யாவை;

(iv) அந்த கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட கம்பெனி யாது;

(v) மேற்படி தொழிற்சாலைக்கு இந்திய கம்பெனியொன்றுடன் முதலீட்டுக் கருத்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்ததா;

(vi) ஆமெனின், அந்தக் கம்பெனி யாது;

(vii) அந்த முதலீட்டு உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

6.

209/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.01 ஆந் திகதி தொடக்கம் 2017.07.31 ஆம் திகதி வரை சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையை இறங்குவரிசைக் கிரமத்திற்கேற்ப அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

226/ '18

கௌவ டக்ளஸ் தேவானந்தா,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இரணையாலை மற்றும் ஆனந்தபுரம் பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி மக்கள் அப் பிரதேசங்களில் காணிகளை சுத்தஞ்செய்கையில் பாரியளவில் வெடிபொருட்கள் கிடைத்துள்ளதோடு அது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இதனால் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் வெடிபொருட்கள் உள்ளனவென அறிவித்தல் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பிரதேசத்தில் வெடிபொருட்களை அகற்றுவதற்காக இன்றளவில் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் மேற்படி வெடிபொருட்களை முற்றாகவே அகற்றுவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

254/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மின்சார முறைமையினுள் உத்தேச கேள்வி யாது என்பதையும்;

(ii) மேற்படி கேள்வியை நிறைவு செய்வதற்காக மற்றும் மின்சார பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுப்பதற்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) திடீர் வரட்சி நிலையை எதிர்கொளவதற்கு இலங்கை மின்சார சபையிடம் வேலைத்திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

393/ '18

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மாகாண அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள புதிய அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அமைச்சுக்கள் வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி அமைச்சுக்களுக்கு 2017 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுத் தொகை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சினால் கருத்திட்ட அபிவிருத்திக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததா;

(ii) ஆமெனில், மேற்படி நிதி ஏற்பாட்டுத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி கருத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(இ) இன்றேல், ஏன்?

10.

462/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரின் அமைச்சு அலுவலகங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்களுக்காக வாடகை அல்லது குத்தகை செலுத்தப்படின் அந்த மாதாந்த வாடகை/ குத்தகை தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2015 - 2017 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகை/ குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த பிரத்தியேக பதவியணிக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

474/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண சபையில் நடைபெற்றுள்ள மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முறைகேடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் SIN/B/AG/KI/2017/02 ஆம் இலக்க மற்றும் 2017.04.20 ஆம் திகதிய புலனாய்வு அறிக்கை ஊவா மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இவ்வறிக்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் பாடசாலை புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள 6 (அ) (i) தொடக்கம் (iii) வரையான பந்திகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) இந்த வெளிப்படுத்தல்கள் தொடர்பில் (ஆ) (i) தொடக்கம் (vi) வரை மேற்கொள்ளப்பட்டுள்ள அவதானிப்புகளை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

526/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்ளுக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட காப்புறுதி இழப்பீட்டுத் தொகை அக்குடும்பங்களுக்கு கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) 2016ஆம் ஆண்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது சேதமடைந்த வீடு ஒன்றுக்கு அதிகபட்சம் ரூபா 25 இலட்சம் வரை காப்புறுதி இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியுமென பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கொலொன்னாவ, அங்கொட, வெல்லம்பிட்டிய, சேதவத்த, களனிமுல்ல, பேலியகொட, கடுவலை மற்றும் பஹல போமிரிய ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள எந்தவொரு வீட்டுக்கும் இதுவரை அவ்வாறான காப்புறுதி இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் பாதிக்கப்பட்டவர்களின் சேதமடைந்த வீடுகளை விலை மதிப்புச் செய்து காப்புறுதி இழப்பீட்டுத் தொகையொன்றை அல்லது வேறு ஏதேனும் இழப்பீட்டுத் தெகையொன்றை செலுத்த நடவடிக்கை எடுக்கும் திகதி யாது என்பதையும்;

(iv) சேதமடைந்த வீடுகளுக்கு இன்றளவில் ஏதேனும் இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருப்பின், அவ்வாறு இழப்பீடு பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அத்தகைய காப்புறுதி இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

562/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்டத்திற்கும் ஏற்ப தனித் தனியாக யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஆசிரியர்களுக்கு இடர் கடன் செலுத்துவதற்காக விடுவிக்கப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்குமேற்ப எவ்வளவென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இடர் கடனுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்டத்தின் படி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) தற்போது இடர் கடன் செலுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

(v) தற்போது இடர் கடன் செலுத்தப்படாதுள்ள ஆசிரியர்களுக்கு இக்கடனை செலுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

991/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் பதியத்தலாவை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரின் கீழ் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 18 ஆம் திகதிய 2076/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.07.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 24 ஆம் திகதிய 2081/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அங்கத்தவர்களுக்கு ஊதியமொன்றைச் செலுத்தல்,— 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பிரகாரம் தலைவர் உட்பட ஏழு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டதுடன் அந்தச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அந்த அலுவலக அங்கத்தவர்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பதுடன் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்கு செலவாக அமையுமாறு செலுத்தப்பட வேண்டியுள்ளதாலும்;

காணாமற்போன ஆட்களைத் தேடுதல், அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிதல் மற்றும் அவர்களது நிலைமை தொடர்பாக தெளிவுபடுத்திக்கொள்ளல் மற்றும் காணாமற்போனோரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு இழப்பீடு செலுத்துதல், உள சமூக ஆதரவு மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் காணாமற்போதல் சம்பந்தமான நிகழ்வுகளை குறைத்துக்கொள்ளுவதற்காக உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்த அலுவலகத்திற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும்;

அதற்கமைய சனாதிபதியவர்கள், இந்த அலுவலகம் தொடர்பாக 2018 மார்ச் 22 ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை நிருபத்திற்கமைய 2018 யூன் 05 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் அங்கத்தவர்களின் ஊதியங்களைச் செலுத்துவதற்கு பின்வருமாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்:-

(அ) இந்த அலுவலகத்தின் தலைவருக்கு ரூபா 100,000/- மாதாந்தக் கொடுப்பனவு, ரூபா 10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் மற்றும் மாதாந்தம் 225 லீற்றர் எரிபொருளுடன் உத்தியோகபூர்வ வாகனமொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும்; மற்றும்

(ஆ) ஏனைய அங்கத்தவர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவு, ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் மற்றும் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோமீற்றர் தூரத்தை வரையறுத்து ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோமீற்றர் அல்லது அதனிலும் அதிகளவு தூரத்திற்காக ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்கும்.

அதற்கமைய, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அலுவலகத்தின் அங்கத்தவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகளை அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்குச் செலவாக அமையுமாறு செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

4.

பா. 50/ '18

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ வேலு குமார்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ லக்கி ஜயவர்தன

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ மனோ கணேசன்

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ ஜோன் அமரதுங்க,— இலங்கையில் இன மற்றும் மத ஒற்றுமையை உறுதி செய்வதை ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரிகுழு,— இந்த வருடத்தின் மார்ச் மாத ஆரம்பத்தில் கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளில் அண்மைக்கால துரதிஷ்டவசமான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதனாலும்;

2014 ஜூன் மாதத்தில் பேருவளைத் தேர்தல் தொகுதியிலும், 2018 பெப்ரவரி மாதத்தில் அம்பாறை மாவட்டத்திலும் துரதிஷ்டவசமான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதனாலும்;

அண்மைக்காலத்தில் வேறுபட்ட இன சமூகங்களுக்கிடையில் இன வெறுப்புணர்வு வளர்ச்சியடைவது உக்கிரமடைந்துள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளதனாலும்;

அத்தகைய சம்பவங்கள் பற்றி ஆராய்வதற்காக எதிர்காலத்தில் சமூகங்களுக்கிடையில் அவ்வாறான குற்றங்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்குப் பொருத்தமான பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தும் தேவையொன்று எழுந்துள்ளதனாலும்;

2018 மார்ச் 10 ஆம் திகதி கண்டி பிரதேசத்தில், இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்து இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய தகவல்களை ஆராயும் செயற்பாடொன்று அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் முழுமையான ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகரினால் தலைமைத்துவம் வழங்கப்பட்டுள்ளமையினாலும்;

குறிப்பிடப்பட்ட விஜயத்தின் விளைவாக, அனைத்து நாயக்க தேரர்களையும் ஏனைய மதிப்புக்குரிய மதத் தலைவர்களையும் சகல பாராளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள்/பிரதிநிதிகள்; உரிய அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள்; சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் தளபதிகள் ஆகியவர்கள் உள்ளடங்கலாக மாநாடு ஒன்றினைக் கூட்டுவதற்கு கௌரவ சபாநாயகரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஏற்ப 2018 ஏப்பிறல் 19 ஆந் திகதியும் அதற்குப் பின்னர் 2018 ஜூன் 29 ஆம் திகதியும் உச்சி மாநாடுகளை நடாத்தியுள்ளதனாலும்;

சகல இனக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தின் ஆளும் கட்சி/ எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய, கௌரவ சபாநாயகரினால் தலைமைத்துவம் வகித்த “பாராளுமன்றத்தின் விசேட தெரிகுழு” ஒன்றைத் தாபிப்பதற்கான இயலுமை பற்றி ஆராய்தல் வேண்டுமென 2018 மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளதனாலும்;

2018 ஜூலை 05 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற அலுவல் பற்றிய குழுவும் குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற தெரிகுழு நியமிப்பதை சான்றுரைத்துள்ளதனாலும்;

இலங்கையில் இன மற்றும் மத ஒற்றுமையை பின்வரும் விடயப் பரப்புகளில் உறுதிசெய்வதை ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கு ஒரு பாராளுமன்ற தெரிகுழு நியமிக்கப்பட வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) அத்தகைய செயற்பாடுகளில் தேசிய ஒற்றுமையை அல்லது ஈடுபாட்டை குலைக்கும் அவதூறான கருத்து/கருத்துக்கள் பரவுவதைத் தடுத்தல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் தனியாட்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதன் அவசியம்;

அதாவது, வெறுப்புணர்வை ஏற்படுத்தும் பேச்சினைத் தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளடக்குவது பொருத்தமானதாவென கலந்துரையாடித் தீர்மானித்தல்;

(ஆ) கடந்த காலத்தில் நிலவிய வேற்றுமைகளுடன் உருவாக்கப்பட்ட மோசமான விளைவுகளை எதிர்கால சந்ததியினர் அடைவதைத் தவிர்த்தல் மற்றும் அவை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரை அறிவுறுத்தல்;

(இ) மத மற்றும் தேசிய நல்லிணக்கத்தை உறுதிசெய்வதற்கு உரிய அனைத்து தரப்புகளினதும் நேரடியான மற்றும் நேர்மையான தலையீட்டுக்கும் பங்களிப்புக்கும் மதிப்பளித்தல்;

(ஈ) பாடசாலை முறைமையை இனத்தையோ அல்லது மதத்தையோ அடிப்படையாகக்கொள்ளாது வகைப்படுத்தல்;

(உ) வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலும் மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும் சிறுபான்மை இனத்துவக் குழுமங்களின் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கும் கலந்துரையாடல் ஊடாக அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வலுவூட்டப்பட்ட பாராளுமன்றக் குழுவினை நிறுவுதல்;

(ஊ) தம்ம பாடசாலைகளை நடத்துவதற்குத் தடையாகவிருக்கின்ற தனியார் மேலதிக வகுப்புக்களை ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் நடத்துவதைத் தடைசெய்தல்;

(எ) சமய வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும் போதும் உருவங்களையும் சிலைகளையும் தாபிக்கும் போதும் சட்டத்தின் பொதுவான அமுல்படுத்தலுக்குத் தேவையான சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகளை உருவாக்குதல் மற்றும் அதற்கான பொதுவான சட்டக் கோவையின் அவசியம்;

(ஏ) இன ஒற்றுமை தொடர்பாக மாணவர்களின் உள்ளங்கள் பாழ்படுத்தப்பட்டிருக்கும் உண்மையினை அவர்களுக்குத் தெரியப்படுத்தி இனங்களுக்கு மத்தியில் தேசிய நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பினையும் உருவாக்குவதற்காக ஒரு விசேட பாடத்தினை பாடசாலைப் பாடவிதானத்தினுள் அறிமுகப்படுத்தல்;

(ஐ) பொதுமக்களின் அங்கீகாரத்தினையும் மரியாதையினையும் பெற்ற கல்வியியலாளர்கள், புலமையாளர்கள் மற்றும் நபர்களின் பங்களிப்பினை இந்த இன மற்றும் சமய நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பெற்றுக்கொடுத்தல்;

(ஒ) சகல சமயங்களினாலும் தேசிய ரீதியில் பிரதிநிதித்துவம் செய்யப்படும் நிபுணர் குழாம் ஒன்றினை நிறுவுவதற்கும் மேலும் பொதுமக்களின் அங்கீகாரத்தையும் மரியாதையையும் பெற்ற கல்வியியலாளர்கள், புலமையாளர்கள் மற்றும் கீர்த்திமிக்க ஆட்களைத் திரட்டுவதன் முக்கியமும்;

(ஓ) உள்ளூர் மட்டத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதேச செயலாளர் அல்லது மாவட்டச் செயலாளரின் அனுசரணையின் கீழும் கௌரவ அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும் பாதுகாப்புப் படைகள், பொலிஸ் மற்றும் சமய வழிபாட்டுத்தலங்கள் ஆகியவற்றின் பங்களிப்பினைப் பெறுவதற்குப் பொறிமுறை ஒன்றினை நிறுவுதல்; அத்துடன் குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு தடவை மாவட்ட மட்டத்தில் மேற்குறிப்பிட்ட குழுக்களின் கலந்துரையாடலை நடத்துதல்;

(ஔ) சமூக இணையத்தளங்கள், பல்வேறு ஊடக வலையமைப்புகள், அச்சு/ இலத்திரனியல் ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் கருத்துக்களை வெளியிடுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய விதிகளை உருவாக்குதல்;

(க) தேசிய ஒற்றுமையைக் குலைக்கும் செய்திகளை வெளியிடுவதைத் தடைசெய்வதற்கும் அது தொடர்பாக எவ்வாறு சட்டங்களை உருவாக்குவது என்பதுவும்;

(ங) அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் தமது கருத்துக்களைச் சமர்ப்பிப்பதில் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு இனமும் சமமான உரிமைகளைக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தல்;

(ச) பொய்யான மற்றும் வெறுப்புக் கூற்றுக்கள் மூலம் தேசிய நல்லிணக்கம் குலைக்கப்படுவதைத் தடுப்பதற்கும் சமயத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் ஏனைய உயர் குடியினர் போன்றவர்களின் பங்குபற்றலுடன் நடக்கும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அவ்வாறான சூழ்நிலைகள் நிகழ்வதைத் தடுத்தல் ஊடாக நிறுவனங்களுக்கு விதிகளை உருவாக்குதல்;

(ஞ) தேசிய மொழிக் கொள்கையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்த்தல்;

(ய) தேசிய இணக்கத்தினை ஏற்படுத்தல் தொடர்பில் பொதுமக்களின் மனோநிலையினை சாதகமான விதத்தில் மாற்றுவதற்கும் அதன் முக்கியத்துவம் பற்றி உரிய அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் மன்றம் போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களினூடாக பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தி அதனை அரசாங்கத்தினால் நிருவகித்தல்;

(ர) இன விரோத நிகழ்வொன்றின் படி ஏற்பட்ட குரோத நிலைமையின் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டின் அழுத்தநிலைமை, நிவாரணத்தினை எதிர்பார்க்கின்ற இனக்குழுவின் ஏதேனும் நபர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாட்டினைப் பொறுப்பேற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தேவையான அதிகாரம், நிதி ஏற்பாடு மற்றும் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்துடன் கூடிய " இன உறவுகள் சபை" உருவாக்குதல் தொடர்பாக தேவையான சட்டங்களை உருவாக்குதல்;

(ல) தேசிய பொலிஸ் திணைக்களம் மீதான சிறந்த பொது மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காக, பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் பொதுவாகப் பொலிஸ் முறைமை என்பவற்றைப் பரிசீலித்து மாற்றங்களைப் பரிந்துரைத்தல்.

(2) (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்ற நிலையியல் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது இருபத்து ஐந்திற்கும் (25) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் அத்தகைய ஆளிடம் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரினால் செய்துவைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் கீழ் சாட்சி வழங்கும் சாட்சிகளை வாய்மொழி மூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறுவகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவிற்கு உதவுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்களதும் வல்லுனர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கையைத் தயாரிப்பதற்கும் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைப்படாது அமர்வுகளை நடத்துவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) குழுவானது, அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அல்லது பாராளுமன்றத்தினால் மேலதிகமாக வழங்கப்படுகின்ற வேறு கால எல்லையினுள் அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

* 5.

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (190 ஆவது அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தபால் கட்டணங்கள் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 07 ஆம் திகதிய 2074/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 5(15) ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 02 ஆம் திகதிய 2078/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம் மற்றும் 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 (2) ஆம் பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மருந்துகளைப் பதிவுசெய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 05 ஆம் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரைக்கமைய, சனாதிபதியவர்கள், அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2015.11.27 ஆம் திகதி திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமித்துள்ளார். 153(2) ஆம் உறுப்புரைக்கமைய அவரது சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன், அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்குச் செலவாக அமையுமாறு செலுத்தப்பட வேண்டியுள்ளதாலும்;

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துடன் தொடர்பாக 2017.12.19 ஆம் திகதி என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றத்தை இத்தால் அகற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், சனாதிபதியவர்களால் 2017.03.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.03.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புக்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்;

(அ) 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்திற்கமைய 2015.11.27 ஆம் திகதி முதல் SL-4 சம்பள அளவுத் திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய படிகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்திற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மீளமைக்கும்போது SL– 4 சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் அந்தச் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மீளமைத்துச் செலுத்துவதற்கு மற்றும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம், சேவை அனுபவத்தைப் போன்றே முன்னைய சேவைக்குரிய சம்பளத்தின் மீதும் விசேட கவனத்தைச் செலுத்தி 2017.03.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அவருக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் ஏற்புடைத்தாகும் வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 50,000/- விசேட படியொன்றை வழங்குவதற்கும்.

அதற்கமைய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரைக்கமைய, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்திற்குச் செலவாக அமையும் வகையில் மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 11.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 05 ஆம் திகதிய 2074/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 15.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— குடியியல், வான்செலவுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல், வான்செலவுச் சட்டத்தின் பிரிவுகள் 11(1)(ஆ), 17(2) மற்றும் 31(ஈ), (உ),(ஊ), (எ) மற்றும் (ஏ) உடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 117(2)(ஐ) ஆம் பிரிவின் கீழ் குடியியல் வான்செலவு காப்பு முகாமை தொடர்பில் போக்குவரத்து மற்றும் வான்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்பிறல் 05 ஆம் திகதிய 2065/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 28.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 ஏப்பிறல் 06 ஆம் திகதிய 2065/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மே 31 ஆம் திகதிய 2073/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 31.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 32.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 33.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 34.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.09.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 35.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 36.

அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன கணக்காய்வாளர்களின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.09.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 37.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2012),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.11.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 38.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 39.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.03.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 40.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் 2017.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.02.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 41.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்,— இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கான 1987 இன் 36 ஆம் இலக்கச் சட்டத்தின் 37(2) பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) பிரிவின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2018.02.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 42.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை (2014),— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2016.08.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 43.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2013),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமும் 2016.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 44.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2013),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமும் 2016.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 45.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2014),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமையவும் 2017.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 46.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2014),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 47.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2013),— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2016.01.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 48.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2014),— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமையவும் 2016.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 49.

விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை (2015),— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2017.06.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 50.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கா தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 51.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 52.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 53.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 54.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2017.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.12.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 55.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் xiii (110) ஆம் பிரிவிற்கமைய 2016.10.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

